ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2255/24 - 2021 නොවැම්බර් මස 24 වැනි බදාදා - 2021.11.24
*2255/24 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சனாதிபதி சட்டத்தரணிகள் நியமனம் தொடர்பான வழிகாட்டி நெறிகள்

*ச. அ. இல.: PS/CSA/00/2/48.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33(உ) ஆம் உறுப்புரைக்கமைய சனாதிபதி அவர்களுக்குரிய அதிகாரங்களைப் பிரயோகித்து, சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிக்கும்போது ஏற்புடையதாகும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பின்வரும் வழிகாட்டி நெறிகள் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

சனதிபதி அலுவலகம்,
கொழும்பு 1,
2021, நவெம்பர் 22.

### சனாதிபதி சட்டத்தரணிகள் நியமனம் தொடர்பான வழிகாட்டி நெறிகள்

01 இவ்வழிகாட்டி நெறிகள் சனாதிபதி சட்டத்தரணிகள் நியமனம் தொடர்பான வழிகாட்டி நெறிகள் என அழைக்கப்படுகின்றது.

02. (i) இலங்கை உயர் நீதிமன்றத்தின் ஒரு சட்டத்தரணியாக ;

(ii) சட்டத் தொழில்துறையில் அதிசிறந்த நிலையை அடைந்துள்ளவராகவும், உயர்ந்த தரத்திலான நடத்தையையும் தொழில்சார் நேர்மையையும் பேணுபவராகவும் ;

1A - G 35292 — 20 (2021/11)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(iii) (அ) இலங்கையின் எந்நீதிமன்றத்திலேனும் சட்ட வாதாட்டங்களினூடாக முனைப்பான பங்களிப்பை வழங்கியுள்ள; அல்லது

(ஆ) சட்டத்தின் மேம்பாட்டுக்காகச் சட்ட வாதாட்டங்களின் மூலம் முனைப்பான பங்களிப்பை வழங்கியுள்ள; அல்லது

(இ) அரச துறையிலோ அல்லது இலங்கையிலோ அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திலோ சிரேஷ்ட மட்டத்திலான சட்டவிடய நிபுணரொருவராக மிக விசேட அத்துடன் தலைசிறந்த பங்களிப்பை வழங்கியிருத்தல் அல்லது இலங்கைக்கான புகழை அல்லது பெருமதிப்பைப் பெற்றுக்கொடுத்துள்ள;

(iv) எப்போதும் நன்மதிப்பையும் நல்லொழுக்கத்தையும் கொண்டுள்ளவராக;

(v) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை மீறாதவராக ;

(vi) சட்ட ஆட்சியை அல்லது நீதிமன்றத்தின் சுயாதீனத்தைச் சீர்குலைக்கும் அல்லது முடக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபட்டிராதவராக ;

(vii) உயர் நீதிமன்றத்தினால் அல்லது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஏதேனும் ஒழுக்காற்றுக் கட்டளைக்கு ஆளாக்கப்படாத மற்றும் நீதிமன்றமொன்றினால் தொழில்சார் துர்நடத்தைக்கு அல்லது குற்றவாளியாக்கப்படாத மற்றும் வங்குரோத்து நிலையில் இல்லாத நீதிமன்ற அவமதித்தல் தொடர்பாக குற்றவாளியாக்கப்படாத மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின்கீழ் சிறியதொரு குற்றம் தவிர்ந்த உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நீதிமன்றமொன்றினால் எந்தவொரு குற்றத்துக்கும் குற்றவாளியாக்கப்படாத ;

(viii) சனாதிபதி சட்டத்தரணியொருவராக நியமிப்பதற்காக அவரால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட முன்னர் குறைந்தபட்சம் ஐந்து வருட காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி செலுத்துநரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள நபரொருவர் தவிர்ந்த வேறு எவரும் சனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்படலாகாது.

03. சட்டம் அத்துடன்/ அல்லது சட்ட முறைமை பற்றிய நூல்களை அல்லது வெளியீடுகளை எழுதியிருத்தல், சர்வதேச அல்லது தேசிய மாநாடுகளில் பத்திரங்களைச் சமர்ப்பித்திருத்தல், அங்கீகரிக்கப்பட்ட தேசிய அல்லது சர்வதேச நிறுவனங்களில் சட்டத்துறையில் உயர் கற்கைகளை மேற்கொண்டிருத்தல், அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் சட்டப் பாடத்தைக் கற்பித்திருத்தல், சட்டத்தின் புதுப்பரப்புகளில் இற்றைப்படுத்தப்பட்ட அறிவு பெற்றிருத்தல், இத்தொழில்துறைக்கு அர்த்தமான பங்களிப்பாற்றியுள்ள கனிஷ்ட சட்டத்தரணிகளைப் பயிற்றுவித்திருத்தல் ஆகியன சனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்படுவதற்கான மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும் அதேவேளை, ஒரு பிரசித்த நொத்தாரிசுவாகச் சேவையாற்றிருத்தல் தகைமையீனமாகக் கருதப்பட வேண்டும்.

04. அவர் குறைந்தபட்சம் இருபது (20) வருட காலங்கள் இலங்கை உயரநீதிமன்ற சட்டத்தரணி ஒருவராகப் பணியாற்றியிராவிட்டால் சனாதிபதி சட்டத்தரணியொருவராக நியமிக்கப்படலாகாது. எவ்வாறாயினும், விசேட சந்தர்ப்பங்களின்போது ஏனைய அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்துள்ள, பதினைந்து (15) வருட காலச் சேவையைக் கொண்டுள்ள இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளும் சனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கக் கவனத்தில் கொள்ளப்படலாம்.

05. சனாதிபதி சட்டத்தரணி நியமனமானது, ஆண்டொன்றிற்கு அதிக பட்சம் ஒரு குழு என்ற அளவிற்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

06. ஆண்டொன்றிற்கு நியமிக்கப்படும் சனாதிபதி சட்டத்தரணிகளின் எண்ணிக்கை பத்திற்கு (10) மேற்படலாகாது.

07. சனாதிபதி சட்டத்தரணியொருவராக நியமிக்கப்படுதலானது ஓர் உரிமையாகக் கொள்ளப்படலாகாது.

08. பதவிவழி அடிப்படையில் அரச சட்ட அதிகாரிகளை சனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கும் போது இவ்வழிகாட்டி நெறிகள் ஏற்புடையதாகாது.

09. உறுதிப்படுத்தல் நடைமுறையொன்றின் பின்னர், சனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நபர்கள் தொடர்பில் சனாதிபதி அவர்கள் பிரதம நீதியரசரினதும் சட்டமா அதிபரினதும் அபிப்பிராயத்தை நாடலாம்.

10. விண்ணப்பதாரரால் நேரடியாக அல்லது மறைமுகமாக மூன்றாந் தரப்பினர் மூலம் குறித்த விண்ணப்பப்பத்திரம் தொடர்பாக அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவராக நியமித்தல் தொடர்பாகச் செலுத்தப்படும் அழுத்தங்கள் தகைமையின்மையாகக் கருதப்படும்.

11. எவரேனுமொரு விண்ணப்பதாரரினால் தமது விண்ணப்பப்பத்திரத்தின் மூலம் தவறான தகவல்கள் வழங்குதல் அல்லது போலியான ஆவணங்கள் சமர்ப்பித்தல் அல்லது காரணங்களை மறைத்தல் செய்யப்பட்டுள்ளவிடத்து அவ்விண்ணப்பப்பத்திரம் அக்காரணத்தினாலேயே மறுக்கப்பட்டதாகக் கருதப்படும்.

12. சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் சனாதிபதி சட்டத்தரணிகள் அனைவரதும் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி செயலக வலைத்தளத்திலும் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

13. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இறுதித் திகதியைக் குறிப்பிட்டு, அரச வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படலாம். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

14. 2019.10.29 ஆந் திகதிய 2147/37 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட “சனாதிபதி சட்டத்தரணிகள் நியமனத்துக்கான வழிகாட்டி நெறிகள்” இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.